**இராமநாதபுரம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**

(07-10-2015 – 11-10-2015)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 06-10-2015

**கடந்த கால வானிலை 01-10-2015 முதல் 05-10-2015 வரை**

| **காரணிகள்** | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 28.7 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 29-33 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 25-27 |
| மேக மூட்டம் | 5-8 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 78-95 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி ) | 0-10 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 11-10-2015 - 8.30 மணி நேரம் வரை**

| **காரணிகள்** | **07.10.15** | **08.10.15** | **09.10.15** | **10.10.15** | **11.10.15** |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 2 | 3 | 2 | 2 | 2 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 32 | 32 | 32 | 32 | 32 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 25 | 25 | 25 | 25 | 25 |
| மேக மூட்டம் | 7 | 7 | 7 | 7 | 7 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 82 | 80 | 82 | 81 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 78 | 81 | 78 | 79 | 80 |
| காற்றின் வேகம் (கி.மீ / மணி ) | 4 | 4 | 4 | 4 | 4 |
| காற்றின் திசை | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு |

குறுஞ்செய்தி :

அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை: லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: நெல், பருத்தி மற்றும் பருப்பு வகைகள்**

**பருவம்: நெல்- முளைக்கும் பருவம்**

- விவசாயிகள் விளை நிலத்தில் ஒரு பகுதியை மட்டும் மழை நீரை சேமித்து வைப்பதற்கு முறையான ஏற்பாடுகள் செய்ய அறிவுறுத்தப்படுகின்றன. ஏனெனில் இந்த மழை நீரை பயன்படுத்தி வறட்சி காலங்களில் பயிர்களுக்கு பாசனம் செய்யவதற்குப் பயன்படுத்த முடியும்.
- பின் சம்பா பருவத்தில் நேரடி விதைப்பில் விதைப்பதற்கு முன் விதைகளை சூடோமோனாஸ் என்ற எதிர் உயிரியினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். இதனால் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரிய தன்மை அதிகரிக்கும். விதைகள் முலம் பரவக்கூடிய நோய் கிருமிகள் அழிந்து விடும்.
- நடவு செய்யும் விவசாயிகள் 1 ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம், 10 கிலோ சல்பேட், 15 கிலோ யூரியா, 40 கிலோ டிஏபி மற்றும் 10 கிலோ பொட்டாசியம் ஆகிய உரங்களை அடியுரமாக இடவேண்டும். நடவிற்கு முன் ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம் புண்ணாக்கு இட்டு பூச்சி மற்றும் நூற்புழுக்களை கட்டுப்படுத்தலாம்.
- குறுவை நெற்பயிரில் பூக்கும் பருவ குறுவை நெற்பயிரில் பூக்கும் பருவத்தில் கருப்பு நாவாய் பூச்சி தாக்குதல் பரவலாக தென்படுக்கிறது. இதனைக் கட்டுப்படுத்த புரோப்பனொபாஸ் 50 இ.சி. மருந்தினை ஏக்கருக்கு 400மில்லி என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- மாவுப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேப்ப எண்ணை 2% அல்லது வேப்பங்கொட்டை சாறு 5% அல்லது தையோமீத்தாகசம் 25 WG லிட்டருக்கு 0.6 கிராம் என்ற அளவில் பயன்படுத்தவும்.